**செய்தி வெளியீடு**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.66** **நாள் : 02.04.2025**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், சைதாப்பேட்டை பகுதியில் கைப்பந்து மைதானம், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் மற்றும் படிப்பகம் மற்றும் நூலகத்துடன் கூடிய பல்நோக்குக் கட்டடம் என மொத்தம் ரூ.43.34 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற புதிய திட்டப்பணிகளை இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-169, சைதாப்பேட்டை, தாலுகா அலுவலக சாலையில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி மூலதன நிதி மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.19.34 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கைப்பந்து மைதானம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், வெங்கடாபுரத்தில் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.24 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள படிப்பகம் மற்றும் நூலகத்துடன் கூடிய பல்நோக்குக் கட்டடத்தைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மண்டலக்குழுத் தலைவர்கள் திரு.ஆர்.துரைராஜ் (அடையாறு), திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**